தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 25, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 பிப்ரவரி 7, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

இன்பம் தரக்கூடிய செயல் என்பது, துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

41—

நியாயவிலைக் கடை

***36033—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கஞ்சனூர் மதுரா கொரளூர் கிராமத்தில் உள்ள உணவுப் பொருட்கள் வழங்கும் பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்றி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. கோதண்டராமன், இருக்கையில் இல்லை.

வினா எண் 42, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

42—

இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***32837—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் வருவாய் மூலமாக பழநியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை தங்கள் அனுமதியோடு இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து பழநியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது அத்தகைய பயிற்சிப் பள்ளியைத் தொடங்க தேவையுள்ளதா என்பது குறித்தும், அவ்வாறு தொடங்கப்பட்டால் அதனைத் தொடர்ந்து இயக்க இயலுமா என்பது குறித்தும் பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சின்னசாமி, இருக்கையில் இல்லை.